DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 178-2021**

**Deposition of Witness for Prosecution : P.W. 14 (தொடர்ச்சி)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | டாக்டர். சிவக்குமார் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 24.11.2025

**<u>மனுவின் பேரில் சாட்சியம் அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

நான் தற்சமயம் அரசு ஈரோடு மருத்துவமனை மருத்துவக்கல்லூரில்சட்ட சார்ந்த மருத்துவராக பணியாற்றி வருகிறேன். நான் 21.05.2021ந் தேதி மதியம் 2.30 மணியளவில் திருவாரூர் அரசு மருத்துவமனை மருத்துவக்கல்லூரியில் பணியில் இருந்தபோது வேளாங்கண்ணி காவல் நிலைய குற்ற எண் 168/2021ல் தொடர்புடைய இறந்துபோன குமார் என்ற நபரை ஆணின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய நிலைய காவலர் ஸ்ரீதர் 261 என்பவர் வேண்டுகோள் கடிதத்தின்படி பிரேதத்தை அடையாளம்ட காட்டி சடல கூராய்வு செய்யப்பட்டது. சடல கூராய்வின்போது உடல் உள்ளுறுப்புகளை சேகரித்து தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பியும், இறப்பின் காரணத்தை அறியும் பொருட்டு தொடர் stomuch, Intestine, Liver & Kidney, Brain, Blood and Preservative உள்ளுறுப்புகளை சேகரித்து நிலைய காவலர் ஸ்ரீதர் மூலம் தஞ்சாவூர் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். மேற்படி குமாரின் இறப்பானது

தலையில் மழுங்கிய ஆயுதத்தால் தாக்கியதால் மூளையில் ஏற்பட்ட இரத்தக்கசிவினால் இறந்துள்ளார் என்று கருத்துரை வழங்கினேன். 04.08.2021ந் தேதி தஞ்சாவூர் தடய அறிவியல் துறையால் அனுப்பப்பட்ட விசிரா அறிக்கை **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 27.07.2021ந் தேதி திருச்சிராப்பள்ளி தடய அறிவியல் துறையால் அனுப்பிய சிராலஜி அறிக்கை **அ.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 30.09.2022ந் தேதி திருச்சிராப்பள்ளி தடய அறிவியல் துறையால் அனுப்பிய பையாலஜிக்கல் அறிக்கை **அ.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னால் கொடுக்கப்பட்ட இறுதி கருத்துரை **அ.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சடல கூராய்வு முடிந்தபிறகு கொரானா 2021 காலக்கட்டத்தில் கொரானா வழிகாட்டுதல் படி இறந்த நபரை ஒப்படைக்கப்பட்ட விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால் ஒப்படைக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டதா என்றால் தெரியாது. 2021ல் கொரானா காலத்தில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. வட்டாட்சியர் மற்றும் கிராம உதவியாளர் முன்னிலையில் கொரானா வழிகாட்டுதல் படி இறந்த நபரை அடக்கம் செய்யப்பட்ட விபரம் ஆய்வாளர் மூலம் தெரிந்துக்கொண்டேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அவருடைய இறப்பானது கொரானாவால் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. என்னை ஆய்வாளர் விசாரிக்கும்போது மழுங்கிய ஆயுதத்தை காண்பித்து என்னை விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் எனக்கு ஞாபகம் இல்லை.

**மறு விசாரணை**

கொரானா பாதிப்பு இருந்தால் மண்டை உடைந்து இரத்தம் வருமா என்றால் வராது. கொரானா பாதிக்கப்பட்ட இறந்தவருக்கு இரத்த மாதிரி RTPCR test எடுக்கபடுமா என்றால் எடுக்கப்படாது.

(சாட்சியம் காணொலி மூலம் பதிவு செய்யப்பட்டது)